C.C. No. 214/2020 Date : 04-11-2025

PW1 – ராஜா

எதிரி ஆஜர். (எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 311 இன் கீழான மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.)

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 2 பேர். என் தம்பி, என் தங்கை. நான் கொத்தனார் வேலை பார்த்துவருகிறேன். நான் கொத்தனார் வேலைக்கு அடுத்தவரிடம் செல்கிறேனா அல்லது நானே பெரிய கொத்தனாரா என்றால் நான் பெரிய கொத்தனார். நான் வெளியூரிலும் கொத்தனார் வேலை எடுத்துச் செய்வேனா என்றால் செய்வேன். நான் விபத்தினை கேள்விப்பட்டுத்தான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான். எதிரி சம்பவத்தின்போது தனது இருசக்கர வாகனத்தில் முகப்பு விளக்கு இல்லாமலும் தனக்கு பின்னால் இரண்டு நபர்களை அமரவைத்துக்கொண்டும் வந்தார் என்ற விவரம் நான் கேள்விப்பட்டுத்தான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். நான் விபத்தினை கேள்விப்பட்டதும் நேரடியாக மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை, சம்பவ இடத்துக்கு சென்றேன். விபத்துக்கு பின்னர் எனது தம்பியை அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்றேனா அல்லது தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றேனா என்றால் முதலில் தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்று பின்பு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம்.

2. தனியார் மருத்துவமனையிலிருந்தபோது போலீஸார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. அரசு மருத்துவமனையில் இருந்தபோது என்னை போலீஸார் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை என் தம்பி இறந்தபின்னர் நானே காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். சிவகாசி அரசு மருத்துவமனையில் எனது தம்பி அனுமதிக்கப்பட்டிருந்தபோது, போலீஸார் அங்கு வந்து விசாரணை செய்தார்கள் என்றும், நான் விபத்து இழப்பீடு கிடைக்கவேண்டுமென்பதற்காக என் தம்பி இறந்தபின்னர் நானே காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

C.C. No. 214/2020 Date : 04-11-2025

PW 2 – கனி

எதிரி ஆஜர். (எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 311 இன் கீழான மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் எத்தனை வருடங்களாக திருச்செந்தூருக்கு மாலை அணிந்து செல்கிறேன் என்றால் 11 ஆண்டுகளாக செல்கிறேன். இருக்கன்குடிக்கு செல்லவேண்டுமென்றால் எங்கள் ஊரிலிருந்து மேற்கு பக்கமாக செல்லும் நாரணாபுரம் பைபாஸ் சாலை வழியாக செல்லவேண்டும் என்றால் சரிதான், ஆனால், சம்பவத்தன்று நாங்கள் எங்கள் ஊரிலிருந்து கிழக்கு பக்கமாக செல்லும் அனுப்பன்குளம் பாதை வழியாக இருக்கன்குடி சென்றோம். இறந்துபோன பால்பாண்டி எனக்கு எந்த பக்கமாக வந்தார் என்றால் நாங்கள் மூவரும் ஒன்றுபோல் சென்றோம். எங்களுக்கு நடுவில் பால்பாண்டி வந்தார். நான் சாலையில் நடந்தேன். பால்பாண்டி சாலை ஒட்டினாற்போல உள்ள மண்பாதையில் நடந்தார். அதற்கடுத்து மணிகண்டன் நடந்து வந்தார். டமார் என்று சத்தம் கேட்டபின்புதான் நான் திரும்பிப்பார்த்தேன் என்றால் சரிதான். பால்பாண்டி எனக்கு முன்பாக சாலையில் வந்து விழுந்தார். பால்பாண்டி மீது மோதியதாக கூறப்படும் வாகனம் எவ்வாறு வந்தது என்பதை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் திருச்செந்தூருக்கு மாலை அணிந்துவிட்டு இருக்கன்குடி போக வேண்டிய அவசியம் இல்லையென்றும் இருக்கன்குடி போனதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன பால்பாண்டி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவரது குடும்பத்தினருக்கு விபத்து இழப்பீடு கிடைக்கவேண்டுமென்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.